©
தமிழ்நாடு அரசு
2017

[பதிவு எண். தநா/சிசிஎன்/467/2012 14
[நிமு. எண். 197/2009
[விலை ரூ. 0.80 பைசா

# தமிழ்நாடு அரசு அரசிதழ்

**அசாதாரணம்** அதிகாரபூர்வமாக வெளியிடப்பட்டது

எண். 302] சென்னை, வியாழன், செப்டம்பம் 21, 2017

புரட்டாசி 5, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2048

## பகுதி II – பிரிவு 2

## தலைமைச் செயலகத் துறைகளால் வெளியிடப்பட்ட பொதுமக்களில் ஒரு பிரிவினரின் நலனுக்கான அறிவிக்கைகள் அல்லது ஆணைகள்

## அரசின் அறிவிக்கைகள்

### வணிகவரிகள் மற்றும் பதிவுத் துறை

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிகள் 2017 க்கு திருத்தங்கள்

*[அ.ஆ. நிலை. எண். 111, வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை (ஆ1), 21 செப்டம்பர் 2017*

*புரட்டாசி 5, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு – 2048]*

**எண். II(2)/ வவப /793(இ-1)/2017.**

சரக்குகள் மற்றும் சேவை வரிச் சட்டம் 2017–ன் (தமிழ்நாடு சட்டம் 2017 ன் 19 ல்) பிரிவு–9 உட்பிரிவு (1), பிரிவு–11 உட்பிரிவு (1), பிரிவு 15 உட்பிரிவு (5), பிரிவு 16 உட்பிரிவு (1) ல் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி குழுவின் பரிந்துரைகளின் படி, தமிழ்நாடு ஆளுநரால், அவ்வாறு செய்வது பொதுமக்களின் நலனுக்கு அவசியம் என மனநிறைவடைந்து, 2017 ஜூன் 29 தேதியிட்ட தமிழ் நாடு அரசு அரசிதழ் அசாதாரணமானதின் பிரிவு 2 பகுதி–II, பக்கங்கள் 85 முதல் 119 வரை வெளியிடப்பட்ட வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை அறிவிக்கை எண். II (2)/வவப/532(டி–14)/2017ல் பின்தொடரும் திருத்தங்கள் இதன்மூலம் செய்யப்படுகிறது. அதாவது:-

## திருத்தங்கள்

கூறப்பட்ட அறிவிக்கையின். அட்டவணையில், வரிசை எண் 3 க்கெதிராக, நிரல் 3–ல் இனம் (vi) மற்றும் நிரல் (3), (4) மற்றும் (5) அதன் தொடர்பான பதிவுகளுக்காக பின்தொடரும் மாற்றீடு செய்யப்பட வேண்டும். அதாவது:-

| (1) | (2) | (3) |
|---|---|---|
| "(vi) மத்திய அரசு, மாநில அரசு மற்றும் ஒருங்கிணைந்த ஆட்சி பகுதி, உள்ளாட்சி அமைப்பு அல்லது அரசுகளின் அதிகார அமைப்புகளுக்கு வசதி செய்து கொடுக்கப்பட்ட சேவைகளான கட்டுமானம், நிறுவுதல், நடைமுறைப்படுத்துதல், அமர்த்துதல், முழுமையாக்குதல், பொருத்துதல், பழுதுபார்த்தல், பாரமரித்தல், சீரமைத்தல் அல்லது மாற்றியமைத்தலான–<br>(a) ஒரு குடிமுறைக்குரிய கட்டமைப்பு அல்லது வேறு ஏதேனும் மூலவேலைகள் வணிகவியல், தொழிலகம் அல்லது வேறு ஏதேனும் வணிகம் அல்லது வாழ்க்கை தொழில் தவிர அதற்காக பிரதானமாக பயன்படுத்தினால்.<br>(b) (i) கல்வி பயிற்சிக்காக (ii) மருத்துவகத்திற்காக அல்லது (ii) கலை அல்லது பண்பாட்டு நிறுவனத்திற்காக பிரதானமாகப் பயன்படுத்தக்கூடிய கட்டமைப்பு; அல்லது<br>(c) சொந்த பயன்பாட்டை பிரதானமாக கொண்ட ஒரு குடியிருப்பு வளாகம் அல்லது அவர்களுடைய பணியாளர்களின் பயன்பாடு அல்லது தமிழ் நாடு சரக்குகள் அல்லது சேவைகள் வரி சட்டம் 2017 (தமிழ்நாடு சட்டம் 2017 ன் 19 ல்), அட்டவணை –III பத்தி –3ல் குறிப்பிடப்பட்ட வேறு நபர்கள். | 6 | – |
| (vii) மேலே (i), (ii), (iii), (iv), (v) மற்றும் (vi) உள்ளதை தவிர உள்ள கட்டுமான சேவைகள் | 9 | –" |

2. 2017 செப்டம்பர் 21–ம் நாள் முதல் இந்த அறிவிக்கை நடைமுறைக்கு வருகின்றது

*[அ.ஆ. நிலை. எண். 112, வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை (ஆ1), 21 செப்டம்பர் 2017*

*புரட்டாசி 5, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு – 2048]*

**எண். II(2)/ வவப /793(இ-2)/2017.**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவை வரிச் சட்டம் 2017 (தமிழ்நாடு சட்டம் 2017 ன் 19 ல்) ன் பிரிவு 11 உட்பிரிவு (1)ல் அளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி குழுவின் பரிந்துரைகளின்படி, தமிழ்நாடு ஆளுநரால், அவ்வாறு செய்வது பொதுமக்களின் நலனுக்கு அவசியம் என மனநிறைவடைந்து, 2017 ஜூன் 29 தேதியிட்ட தமிழ் நாடு அரசு அரசிதழ் அசாதாரணமானதின் பிரிவு 2 பகுதி–II, பக்கங்கள் 119 முதல் 143 வரை வெளியிடப்பட்ட

வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை அறிவிக்கை எண். II (2)/ வவப/532 (ஈ–15)/2017ல் பின்தொடரும் திருத்தங்கள் இதன்மூலம் செய்யப்படுகிறது. அதாவது:-

**திருத்தம்**

கூறப்பட்ட அறிவிக்கையில், அட்டவணையில் வரிசை எண். 81 மற்றும் அதனுடன் தொடர்புடைய பதிவுகளுக்குப் பிறகு, பின்தொடருபவை இடைசேர்க்கப்பட வேண்டும். அதாவது:-

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 82 | தலைப்பு 9996 | FIFA U–17 உலகக் கோப்பை 2017 இன் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு நுழைவு உரிமை வாயிலான சேவைகள். | இல்லை | இல்லை |

2. 2017 செப்டம்பர் 21–ம் நாள் முதல் இந்த அறிவிக்கை நடைமுறைக்கு வருகின்றது

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் 2017 ன் கீழ் அறிவிக்கை

*[அ.ஆ.நிலை. எண். 113 வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை (ஆ1) ,21 செப்டம்பர் 2017*

*புரட்டாசி 5, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு – 2048]*

**எண். II(2)/ வவப /793(இ-3)/2017.**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவை வரிச் சட்டம் 2017 (தமிழ்நாடு சட்டம் 2017 ன் 19ல்) ன் பிரிவு 11 உட்பிரிவு (1)ல் அளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி குழுவின் பரிந்துரைகளின்படி, தமிழக ஆளுநரால், அவ்வாறு செய்வது பொதுமக்களின் நலனுக்கு அவசியம் என மனநிறைவடைந்து, அணுசக்தி துறையால் நியூகிளியர் பவர் கார்ப்பரேஷ்சன் ஆப் இந்தியா லிமிடெட்–க்கு வழங்கப்படும், சுங்கவரி கட்டண வீதப்பட்டியல் சட்டம் 1975 (மத்தியச் சட்டம் 1975 ன் 51 ல்) முதல் அட்டவணையில் அத்தியாயம் 28–ன் கீழ்வரும் அணு எரிபொருட்கள் மற்றும் கடின நீரினை மாநிலத்திற்குள் வழங்கும் போது தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டம், 2017 (தமிழ்நாடு சட்டம் 2017 ன் 19ல்)–ன் பிரிவு 9 ன் கீழ் விதிக்க வேண்டிய மாநில வரி முழுவதையும் இதன் மூலம் விலக்களிக்கப் படுகிறது.

2. 2017 செப்டம்பர் 21–ம் நாள் முதல் இந்த அறிவிக்கை நடைமுறைக்கு வருகின்றது

முனைவர்.ச.சந்திரமௌலி,
அரசின் கூடுதல் தலைமை செயலாளர்(முகூபொ).